27-04-2026 **அ.வ.எண். 1617/2016** பி.சா.1

(**முரளிதரன்** த/பெ. செட்டிமுத்து)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

6) பி.சா.ஆ.1 ஆவணமான மாநகராட்சியில் 28.10.2022-ல் பட்டா மாறுதல் கோரி வழங்கப்பட்ட விண்ணப்பம் என்றால் சரிதான். நான் மனு கொடுத்த தேதிக்கு முன்னதாகவே கோவை, முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் விண்ணப்பத்திற்கு மேற்படி வழக்கு தீர்ப்பை இணைத்து வழங்கினேனா என்றால் இல்லை. நான் நீதிமன்ற உத்தரவை மறைத்து பட்டா மாறுதல் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி தீர்ப்பின்படி பிரச்சனைக்குரிய இடமானது எனக்கு உரிமையில்லை என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) நான் குடியிருக்கும் வீட்டின் தென்புறத்தில் ஒருவழி உள்ளது என்றால் இல்லை. எனக்கு போயர்வீதி எண்.2 க்கு சென்றடைவதற்கு தனிப்பட்ட வழி உள்ளது என்றாலும், அதன் காரணமாகத்தான் நான் போட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு முன்பாகவும், வாதியின் வீட்டிற்கு பின்பாகவும் உள்ள இடம் வாதியின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட இடம் என்றாலும், வாதிகளுடைய ஆவணப்படி அவருக்கே பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி தீர்ப்பை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்திருந்தேன் என்றால் ஆமாம். மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த சூழ்நிலையிலும் எனது மேல்முறையீடு வழக்கு

தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8) பொய்யான விபரங்களை கூறி பட்டா மாறுதல் போன்ற விபரங்களை வாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவேண்டி தவறான எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**Sd/- Selvi. C.Nandhini**
**II ADM, CBE.**